1974 சனவரி 22]

திரு. நா. வீராசாமி : அம்மூரைப் போல வடாற்காடு மாவட்டத்தில் இருக்கக்கூடிய டவுன் பஞ்சாயத்துக்கள் எல்லாம் ஆய்வு செய்வதற்காகக் கட்டணத்தைச் செலுத்திவிட்டன. அப்படிக் கட்டணம் செலுத்தியுள்ள டவுன் பஞ்சாயத்துகளுக்காவது உடனடியாகக் குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : ஆய்வு செய்வதற்கு கட்டணம் கட்டுவது பெண் பார்ப்பதுபோல. அதற்குப் பின்னர் பிடித்திருந்தால் திருமணம் நடக்கும், இல்லாவிட்டால் நடக்காது. ஆய்வு செய்து, அந்தத் திட்டத்திற்கு ஆகும் செலவை 30 ஆண்டுக் காலத்தில் திருப்பித்தர அவை ஒத்துக்கொள்ள வேண்டும். செலவு அதிகமாக இருக்கிறது என்றால் குறைந்த செலவில் புதியதாக ஒரு திட்டத்தைத் தயாரிக்க வேண்டும். ஆய்வு செய்வதற்காக, ஒரு குறைந்த தொகையைத் தந்துவிட்ட காரணத்தினாலேயே திட்டங்கள் நேரிடையாக நிறைவேற்றப்படாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி எண்கள் 71, 72, 73 தள்ளிவைக்கப்படுகின்றன. அடுத்த கேள்வி 74.

Regulator across Mudavanar in Vettangudi

* 74 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether it is a fact that the construction of a regulator at Mudavanar drain in Vettangudi of Sirkali taluk has been taken up for execution; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) சீர்காழி வட்டம், வேட்டங்குடி கிராம எல்லைகளுக்குள் முடவனாற்றின் குறுக்கே ரூ. 2.89 லட்சம் செலவில் பொறி மதகு ஒன்றைக் கட்டும் பணி நிறைவேற்றப்படுவதற்காக 1973 சூலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது. கட்டுமானப்பொருள்கள் சேகரிக்கும் பணி நிறைவேறி வருகிறது. மண்கரை அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. வடிகாலில் நீரோட்டம் தொடங்கிவிட்டபடியால் கட்டுமானப் பணி 1974-ல் வடிகாலில் நீர் வரவு நின்றுபோகும் காலத்தொடக்கத்தில் மீண்டும் தொடங்கப்படும். 1973 சூலை வரை இத் திட்டம் முழுவதற்கும் செலவிட்ட தொகை சுமார் ரூ., 60,000 ஆகும்.

திரு. என். டென்னிஸ் : இந்தத் திட்டம் எப்போது முடிவு அடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : எப்போது முடிவு அடையும் என்ற தகவல் இல்லே. நீர் நின்றவுடன் வேலே துவங்கப்படும் என்ற குறிப்பு இருக்கிறது.

தானிப்பாடியருகே வரட்டாற்றின் குறுக்கே அணே.

* 75 விஞ.—திரு. எம். எஸ். இராதாகிருட்டினன் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் வட்டம், தானிப்பாடி கிராமத்திற்கு தெற்கே உள்ள வரட்டாற்றில் புதிய அணே ஒன்று கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) செங்கம் வட்டம் தானிப்பாடி கிராமத்திற்கு தெற்கே உள்ள வரட்டாற்றில் ஒரு புதிய அணே கட்டும் திட்டத்திற்கான மதிப்பீடு ரூ. 1,84,600-க்கு அரசு அங்கிகாரம் கொடுத்துள்ளது. இத்திட்டத்தினுல் 176 டன் அதிக உணவு உற்பத்தி எதிர்பார்க்கப் படுகிறது. ஒரு டன் உணவின் விலே ரூ. 1,048 ஆகும்.

Sulagiri Dam

*76 Q.—Thiru K. S. KOTHANDARAMIAH : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) the stage at which the investigation work of the construction of Vempatti Dam near Sulagiri village in Hosur taluk stands; and

(*b*) the total number of acres which can be brought under irrigation under this scheme?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஓசூர் தாலுக்கா எம்பள்ளி கிராமத்தருகில் சூளகிரி சின்னுற்றின் குறுக்கே ஓர் நீர்த் தேக்கம் அமைக்கும் திட்டம் உள்ளது. இத் திட்டத்திற்கான விரிவான மதிப்பீடுகளும் வரைபடங்களும் பாசனத் தலைமைப் பொறியாளர் அலுவலகத்தில் பரிசீலனையில் உள்ளது.